387



ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

दारैः पुत्रैरितरमनुजैः बन्धुवर्गैश्च नित्यं
स्वस्वाभीष्टाकलनविषये पीड्यमानोऽहमेषः ।
संसारेऽस्मिन् वनभुवि दवैः क्लिश्यमानस्समन्तात्
शम्भो मुग्धो हरिण इव हा मार्गहीनो भ्रमामि ॥ १५ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பத்நியாலும், புத்திரர்களாலும், பந்துவர்க்கங்களாலும், மற்றுமுள்ள மித்திரன்முதலானவர்களாலும் ஒவ்வொரு தினமும் தங்கள் தங்களுக்கு வேண்டிய கார்யங்களைச்செய்துகொடுக்கவேண்டி மிகவும் நிர்ப்பந்திக்கப்பட்டவனுயிருக்கிற நான் இந்த ஸம்ஸாரத்தில் பெரிய கானகத்தின் மத்தியில் நிற்கும் மானானது நான்குபக்கங்களிலும் காட்டுத் தீ சூழ்ந்துகொண்டால் எங்ஙனம் அந்த இடத்தைவிட்டு ஒருவிதமாயும் வெளியில் வரமுடியாமல் கஷ்டப்படுமோ அவ்விதம் நானும் இந்த ஸம்ஸாரத்திலிருந்தும் விலகிவரமுடியாமல் கஷ்டப்படுகிறேன்.

ஒருவர் ஸம்ஸாரத்தில் வெகுகாலம்வரையிலிருந்து அதிலுள்ள சுகதுக்கங்களை அடிக்கடி நன்கு அனுபவித்து அதினால் தம் மனத்திற்கு அதிக கஷ்டம் ஏற்பட்டு அதிலிருந்து விலகி உத்தமமான மோக்ஷஸுகத்தைப் பெறுவதற்குத் தகுதியான் மார்க்கத்தில் செல்லவேண்டுமென்கிற விருப்பம் தனக்கிருந்தும் அவ்விதம் நடக்கமுடியவில்லை என்று வருந்துகிறார். ஹே சம்போ!, ஹே பரமேச்வர! நாலுபக்கங்களிலும் தீயால் சூழப்பட்ட வனத்தின் மத்தியிலிருக்கும் மான் வெளியில் சீக்கிரம் போகவேண்டுமென்று எவ்வளவு யத்னம் செய்தும் முடியாமல் எப்படிக் கஷ்டப்படுமோ, அவ்விதம் நானும் இந்த ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுகிறேன். ஆகையால் தாங்கள் அனுக்ரஹம்செய்து என்னை ரக்ஷிக்கவேண்டும்.

உபபத்திராதிபர்

388



# வேதாந்தஸாரஸங்கிரஹம்.

सर्वतन्त्रस्वतन्त्राय सदाद्वैतात्मवेदिने ।
श्रीमते शङ्करार्याय वेदान्तगुरवे नमः ॥ १ ॥

𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌸𑌦𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑌿𑌨𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 । ௧ ।

ஸகலகலைகளுடைய தத்வார்த்தங்களையும் தனக்கு ஸ்வாதீனமாய் செய்துகொண்டவரும், என்றுமழிவில்லாமல் ஏகரூபமாய் விளங்கும் பரமாத்மஸ்வரூபத்தை நன்கறிந்தவரும், அத்வைத வேதாந்தசாஸ்திரத்தினுடைய உண்மைப்பொருளை ஜனங்களுக்குஉபதேசிக்கவேண்டி அவதரித்த குருஸ்வரூபமாயும், ஸகலஐச்வர்யங்களும் நிரம்பியவருமான ஸ்ரீ சங்கரரென்கிற மஹானையும் பொருட்டு வந்தனம்.

योऽवतीर्ण इहाचार्यरूपेण यतिनां मुदे ।
श्रीमन्नारायणं वन्दे तं हरिं करुणानिधिम् ॥ २ ॥

𑌯𑍋𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣 𑌇𑌹𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌰𑍂𑌪𑍇𑌣 𑌯𑌤𑌿𑌨𑌾𑌂 𑌮𑍁𑌦𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌤𑌂 𑌹𑌰𑌿𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 । ௨ ।

எவர் ஸந்யாஸிகளுக்குவேண்டிய நியமங்களையும் பூஜாக்கிரமங்களையும் உபதேசித்து அவர்களுக்கு ஸந்தோஷத்தையுண்டுபண்ணுவதின்பொருட்டு ஆசார்யர் என்கிற பெயருடன் இப்புவியில் தோன்றினரோ, ஸ்ரீநாராயணன் என்று பெயர் வாய்ந்தவரும் கருணைக்கடலாயும், பிரஸித்தமாயும் விளங்கும் அந்த ஹரியை நான் நமஸ்கரிக்கின்றேன். (2)

मननाख्यं प्रकरणं वासुदेवयतीश्वरैः ।
रचितं विस्तरेणाद्य संग्रहेण प्रकाश्यते ॥ ३ ॥

மநநாக்²யம் ப்ரகரணம் வாஸுதே³வயதீஶ்வரை꞉ ।
ரசிதம் விஸ்தரேணாத்ர ஸங்க்³ரஹேண ப்ரகாஶ்யதே ।

வாஸுதேவர் என்று திருநாமம்பூண்ட ஒரு யதிசிரேஷ்டரால் மனனம் என்று பெயர்பெற்ற விரிவான ஒரு பிரகாணம் இயற்றப் பட்டிருக்கின்றது. அதைச் சுருக்கி ஸாரபூதமான பாகத்தை இங்கு நிரூபிக்கப்படுகிறது. (3)

बालानामुपकाराय ममापि ज्ञानसिद्धये ।
तत्र श्रीबालगोपालकृष्णस्सन्निहितो भवेत् ॥ ४ ॥

பா³லாநாமுபகாராய மமாபி ஜ்ஞாநஸித்³த⁴யே ।
தத்ர ஸ்ரீபா³லகோ³பாலக்ருஷ்ணஸ்ஸந்நிஹிதோ ப⁴வேத் ॥ ௪ ॥

ஒரு பெரியாரால் விஸ்தாரமாக எழுதப்பட்ட விஷயத்தையே நீரும் சுருக்கமாக மறுபடியும் எதற்காகக் கூறவேண்டுமென்றால் பாலாநாம் ஸம்போதாய = பிறவிப்பிணியையகற்றி உத்தமமான பரமாத்மஸ்வரூபத்தையடையவேண்டுமென்கிற விருப்பங்கொண் டவர்களும், அதிகாரிகளாயும் அதற்குவேண்டிய நெறியறியாமல் கஷ்டப்படுகிறவர்களாயுமிருப்பவர்கள் பாலர்கள். அவ்வித பாலர் களுக்குவேண்டிய ஸாதனங்களைச் சுருக்கித் தெளிவாக அறி விப்பதே உபகாரமாகும். அந்த உபகாரத்தைச் செய்யவேண்டி யும், எனக்கும் திருடமான ஆன்மஞானம் ஸித்திக்கவேண்டிய தின்பொருட்டும் இந்தப்பிரகாணத்தை வெளியிட முன்வந்தேன். யாதொரு இடையூறுமின்றி உமதிஷ்டம் ஸித்திக்குமாவென்றால் ஸித்திக்குமென்று அறிவிக்கிறார். நல்ல கார்யத்தில் எமது முயற்சி யிருப்பதால் அதைப் பூர்த்திசெய்யவேண்டியது ஸ்ரீ பகவானு டைய கடமையாகையால் இந்தக் கார்யத்தையும் ஸ்ரீபாலகோபால கிருஷ்ணனை பகவான் என் ஹிருதயத்தில் பிரகாசித்துக்கொண்டு பூர்த்தியாகும்படி செய்வார். (4)

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று பெயர்பெற்ற நான்கு புருஷார்த்தங்களுக்குள் மோக்ஷமென்பதே முக்யமான புருஷார்த்தமாகும். அதுவே என்றும் அழிவில்லாததென்றும், நித்யமென்றும், அதைப்பெற்றவன் மறுபடியும் திரும்பிவரமாட் டான் என்றும் சுருதி கூறுகின்றது. மற்றுமுள்ள மூன்றுகளும் இவ்விதமில்லை. அநித்யங்களே. இக்கருத்தையே இவ்வுலகில் கர்மாவால் ஸம்பாதிக்கப்பட்ட பலமானது எப்படி அனுபவத்தால்

நாசத்தையடைகிறதோ, அவ்விதம் தர்மம், அர்த்தம், காமம் இவைகளால் ஸம்பாதிக்கப்பட்ட புண்யமும் போகத்தால் நாசத்தையடைகின்றது என்று சுருதியிலும் கூறப்பட்டிருக்கின்றது. மிகவும் சிறந்ததாகக் கூறப்பட்ட மோக்ஷமென்கிற புருஷார்த்தமும் பிர்மக்ஞானத்தினாலேதான் ஸித்திக்கும். சாஸ்திரங்களில் கூறப்பட்ட இலக்கணத்தோடுகூடியபிரும்மஸ்வரூபத்தைநன்கறிந்தவன்தான் மிருத்யுவென்கிற இயமனை ஜயிக்கிறான் என்றும், மோக்ஷத்தைப் பெறுவதற்கு பிர்மஸ்வரூபத்தை நன்கறிந்தாலன்றி வேறு மார்க்கம் கிடையாதென்றும், பிர்மஸ்வரூபத்தை நன்கறிந்தவன் சிறந்தான மோக்ஷபதத்தையடைகிறானென்றும் மறைகள் போதிக்கின்றன. அந்த பிர்மஸ்வரூபத்தை அத்யாரோப அபவாதங்களால் அறியவேண்டும். ஒரு வஸ்துவில் வேறான ஒரு வஸ்துவை நாம் ஆரோபணம் செய்துவிட்டால் ஆரோபிதமான வஸ்துவை விலக்கிவிட்டு அதற்கு அதிஷ்டானமான உண்மையான வஸ்துவை எப்படியறிகிறோமோ, அவ்விதம் பிர்மஸ்வரூபமும் அத்யாரோபாபவாதங்களால்தான் அறியமுடியும். இக்கருத்தையே

अध्यारोपापवादाभ्यां ज्ञातव्यस्तत्वनिर्णयः ।

அத்⁴யாரோபாபவாதா³ப்⁴யாம் ஜ்ஞாதவ்யஸ்தத்வநிர்ணய: ।

என்று ஒரு பெரியாரும் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் மோக்ஷத்தைப் பெறவேண்டுமென்கிற விருப்பமுள்ளவர்களுக்கு அத்யாரோபாபவாதக்ஞானம் அவச்யம் வேண்டும். ஆகையால் அவைகளை விசாரிக்கிறோம். (இன்னும்வரும்)

உபபத்திராதிபர்.

---

## பத்ரிகாபிமானிகளுக்கு ஒரு விக்ஞாபநம்.

பத்திரிகாநேயர்களே !

நமது ஆசார்யாளின் அனுக்கிரஹத்தால் நடைபெற்று வருகின்ற நமது ஆரியதர்மத்திற்கு பன்னிரெண்டாண்டு நிறைந்துவிட்டதென்று நான் எழுதாமலே தெரிந்திருக்கும். இப்பவும் பன்னிரண்டு வருஷங்களாக நமது ஆரியதர்மமானது இக்கலியில் செழித்தோங்கி; அப்போதைக்கப்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தித்தும், வர்ணாச்ரமதர்மங்களைப் புகட்டியும், நமக்கு அளவிலா ஆனந்தத்தையும் அளித்து வந்திருக்கின்றது. மேலும்,

இவ்வருடமும் பத்திரிகாநேயர்களனைவரும் நமது ஆரியதர்மத்தைக் கைவிடாது ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பின்னும், நாம் நமது ஆரியதர்மத்திற்குச் சந்தாதாரை அதிகமாகப் பெருகும்படிச் செய்தால், நமது பத்திரிகையானது இன்னும் அதிகமாக விருத்தி அடைந்து கொண்டுவரும். மேலும் ஒரு பாஷையானது விருத்தியடைய வேண்டியிருந்தால், பத்திரிகையின் மூலம்தான் ஆகவேண்டும். மேலும், மேல் நாட்டார் பாஷையானது விருத்தியடைய காரணம் என்ன? எல்லாம் பத்திரிகையால்தான். நம்மவர் கணக்கில் அவர்கள் கோடியில் ஒரு பங்கு உளரோ! இல்லையோ! நாம் அறிகிலோம். ஆனால் அவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ, அவ்வளவு பேர்களும் பத்திரிகையை ஆதரிப்பவர்கள்தான். அவர்களில் எவ்வளவோ பத்திரிகைகள் இருந்தும், ஒவ்வொன்றும் 10000 சந்தாதார்களுக்குக் கீழ்பட்டதாக இருக்கவில்லை. அந்தோ! பரிதாபம்! நம் வர்ணாச்ரம தர்மத்தை எடுத்துக்கூறும் பத்திரிகை இந்தஆரிய தர்மம் ஒன்றுதான். இந்த ஆரியதர்மம் ஒரு பத்திரிகையாக இருந்தும் (1000) ஆயிரம் சந்தர்தாரைக் கூடப் பெறவில்லை. நமக்கு தர்மத்தைப் புகட்டுகின்ற இந்த ஆரியதர்மத்தைக் கைவிட்டால் நாம் தர்மத்தை இழந்தவர்களாவோம். ஆகையால் நமது பத்திரிகாநேயர்களனைவரும் ஆரியதர்மத்தைக் கைவிடாது ஆதரித்து, இன்னும் மற்றவர்களையும் வாங்கும்படி தூண்டி, பத்திரிகையை மேல் மேலும் பெருகும்படி செய்து ஆசாரியாளின் அனுக்ரஹத்திற்குப்பாத்திரமாகுமாறு கோருகிறேன். மேலும், பத்திரிகையை ஆதரிப்பவர்கள் தாங்கள் மாத்திரம் தனியே படிக்காமல் தன்னோடு சேர்ந்த பந்துக்களையும், மித்திரர்களையும், ஒன்று சேர்த்து அவர்களுக்கு நன்றாக வாசித்துக்காட்டி, அதன் பெருமையைத் தெரிவித்தால் வாங்காதார் யாருமிலர். பின்னும், நாம் வாசிக்கும்போது நம்மவர்கள் யாராவது வந்து இதென்ன பத்திரிகை என்று கேட்டால், நாம் வாசித்ததற்குப் பங்கம் ஏற்படுமென்று பயந்து இதுஸம்ஸ்கிருதம்என்றுசொல்லிவிட்டால், ஸம்ஸ்கிருதம் நமக்குப் புரியாது என்று வந்தவர்களும் போய்விடுகிறார்கள். ஆகையால் பத்திரிகாநேயர்கள் நமது ஆரியதர்மத்தின் மேல் தயவுசெய்து பத்திரிகையை யாவருக்கும் வாசித்துக்காட்டுமாறு வந்தனத்துடன் கூறுகிறேன். எல்லோரும் கூடி முயற்

சித்தால் இது நடவாத காரியமல்ல. இதையே ஒரு பெரியாரும் கூறியுள்ளார்.

उद्योगिनं पुरुषसिंहमुपैति लक्ष्मीः ।

உத்யோகிநம் புருஷஸிம்ஹமுபைதி லக்ஷ்மீ: ।

தான் முயற்சித்த காரியத்தில் ஊக்கமுடைய புருஷச்ரேஷ்டனை லக்ஷ்மியானவள் அடைகிருள். தான் ஆரம்பித்த காரியத்தை முடித்தவனுக ஆகிறுன். நேயர்களே ! நாம் நமது ஆரியதர்மத்திற்கு சந்தாதாரை அதிகமாக்கி,பத்திராதிபருக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணினுல், பத்திரிகையானது வாரம் இருமுறையாகவோ அல்லது தினப்பதிப்பாகவோ நடக்கிறதற்குக் காரணமாகும்.

மேலும், பத்திராதிபரும், உபபத்திராதிபரும், வர்ணுச்ரமதர்மங்களையும் நாம் அனுஷ்டிக்கவேண்டிய கர்மானுஷ்டானங்களையும், செய்யவேண்டிய காலங்களையும், நன்கு உணர்த்திவருகின்றனர். தவிரவும் இதுவரை இந்த ஆரியதர்மம் இல்லாவிட்டால் நம் வர்ணுச்ரம தர்மங்கள் எல்லாம் பஞ்சாகப்பறந்து போயிருக்குமென்பதில் சிறிதேனும் ஐயமில்லே. இப்போது எல்லோரும் நவீன நாகரீகத்தில் விளையாடுகிறதினுல் நன்கு கர்மாக்களே அனுஷ்டிப்பதில்லே. பெரும்பாலும் ஜனங்கள் இந்தக்கர்மாவை எதற்குச் செய்கிறேம். இதன் பயனென்ன என்று விசாரிப்பதும் இல்லே. எல்லாம் கலியின் பிரபாவமென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இதற்கு உதாஹரணமாகக் கீழ் எழுதப்படும் கதையைக் கவனிப்பாம்.

ஒரு ஊரில் ஒரு பிராம்மணர் இருந்தார். அவர் தம் பால்யம் முதற்கொண்டு நன்குபடித்து கவர்ன்மெண்டில் ஒரு உத்தியோகத்தைப் பெற்று, வயது சென்றபிறகு பென்ஷன் வாங்கிக்கொண்டு இருந்துவந்தார். அவருக்கு ஒரு புதல்வன் இருந்தான். அந்தப் பிராம்மணன் தன் பையனுக்கு உபநயனம் செய்வதின் நிமித்தமாகத் தன் புரோஹிதரை வரவழைத்து என் பையனுக்கு உபநயனம் செய்வதாக உத்தேசித்து இருக்கிறேன். தாங்கள் எல்லாவற்றையும் செவ்வனே நடத்தல் வேண்டும். ஆனுல் வைதிக கார்யங்களுக்கு வேண்டிய சாமான்களுக்கு ஒரு ஜாப்தா பதிந்து கொடுத்துவிட்டால் நான் தயார் செய்து வைத்துவிடுகிறேன். ஏனென்றுல் என் பந்துக்கள் நடுவில் நீர் அதைக்கொடுங்கள்,

இதைக் கொடுங்கள் என்று கேழ்க்காமல் இருப்பீர்களென்றே இந்தமாதிரி செய்யச்சொல்லுகிறேன். மேலும் ஜாப்தாவில் ஒன்றையும் மறந்துவிடாதேயும். சமயத்தில் மறந்துவிட்டேன் என்றால் எனக்கு உம்மிடத்தில் கெட்டகோபம் வரும் என்று சொல்லி புரோஹிதரிடத்தில்ஒருஜாப்தா ஒன்றுவாங்கிக்கொண்டு அனுப்பி விட்டான். பிறகுஉபநயனதினமும்வந்தது. புரோஹிதரும்ஜாப்தாப்படிவந்த சாமான்களை வைத்துக்கொண்டுகர்மாக்களைநடத்தி,கிருஹஸ்தனிடத்தில் இப்போது பிரம்மோபதேசம் செய்யவேண்டுமென்றார். உடனே கிருஹஸ்தன் ஏன் நீர் ஜாப்தாவில் எழுதவில்லை, எழுதியிருந்தால் கடையில் நான் வாங்கி வந்திருப்பேன். சமயத்தில் அவமானம் செய்கிறீரே என்று புரோஹிதரைக் கோபித்துக்கொள்ள ஆரம்பித்தான். அப்போது அவரைச் சேர்ந்த பந்துக்களில் ஒருவர் அவர் அறியாமையைக்கண்டு,பிரும்மோபதேசம் என்பதை நிரம்பவும் சிரமப்பட்டு அவருக்குத் தெரிவித்தார். இந்த மாதிரி கர்மாக்களை அறியாதார்க்கும் மற்றவர்களுக்கும் இந்தப் பத்திரிகையானது நிரம்பவும் உதவிபுரிகின்றது. இனிமேலாவது நம் நேயர்களனைவரும் நன்கு முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களென்று நம்புகிறேன். எல்லாம் வல்ல இறைவன் நம் வர்ணாச்ரம தர்மம் செழித்தோங்கும்படி அருள் புரிவாராக.

சுபம்! V. ஜெகதீசசாஸ்திரிகள்,
அகரப்பேட்டை.

---

## சுகவாழ்க்கை.

சுகவாழ்வாக்கை—சுகமான வாழ்வு. இது தூயவாழ்க்கை, இன்பவாழ்க்கை என்வும் கூறப்படும். தூய்மை உடல் தூய்மை, உளத்தூய்மை என இருவகைப்படும். உடல் தூய்மை நீராலும், உளத்தூய்மை உண்மையாலும் உண்டாவதாம். இது பொதுவிதி. இத்தூய்மைக்கு மேட்டுப்பாங்கான நிலத்திலும், காற்றோட்டமுள்ள இடத்திலும் வாசம் பண்ணுதல், நல்ல நீரைப் பருகுதல் முதலிய வேறு பல சுகாதாரவிதிகளும் உண்டு. அவற்றுள் உழைப்பு, உண்டி, உறக்கம் என்ற மூன்றுமே பெரிதும் இன்றியமையாதன.

உழைப்பு—உழைத்தல்-வருந்தி முயலுதல். உழைப்பில்லாத உடல் வேலை இன்றி வறிதே விடப்பட்டிருக்கும் இயந்திரம்போல பழுதாகவேண்டியதே. 'பழக்கத்தில் இல்லாத பண்டம் பாழ்' என்பது பழமொழி. உழவு, கைத்தொழில் முதலியவற்றைச் செய்பவர் உடல் வன்மை மிக்கவராக இருக்கின்றனர்; நோயின்றி இன்புறுகின்றனர்; நீடிய ஆயுளைப்பெற்று வாழ்கின்றனர். அங்ஙனமின்றி வாழ்பவர் யாண்டும் நோய் வாய்ப்பட்டு வருந்துவர்; எப்பொழுதும் வைத்தியரை நாடி அலைவர், மருந்தும் கையுமாகத் திரிவர். இங்ஙனம் வாழ்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம் அல்லவா? நன்றாய், உழைக்காதவர்க்கு உண்ட உணவு ஜீரணமாகாது. அன்னார் உயிர்தாங்கிக் கிடக்கும் சோற்று மூட்டைக்குச் சமமாவர். அவர்க்குச் சுகமேயில்லை. ஆதலின், சுகவாழ்க்கையை விரும்புவோர் நன்றாக உழைத்தல் வேண்டும்.

உழைத்து உயிர்வாழ வேண்டாதவர்கள் என்ன செய்வது? அவர்கள் செயத்தக்கனவும் உண்டு. அன்னார் காலை மாலைகளில் சில மைல்களேனும் விரைவாக நடந்து வரல் வேண்டும். சிலமைல்கள் விரைந்து ஓடியும் பழகலாம், இவற்றால் நல்லகாற்றை உட்கொள்ள இயலும். அன்னார், கண்களுக்கு இனிமையையும் குளிர்ச்சியையும் அளிக்கும் தோட்டங்களைப் பயிர் செய்யலாம். நாள்தோறும் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கசரத்துச்செய்யலாம். சில்லரைக் காரியங்களை முடித்துக்கொண்டு குளிர்ந்த சுத்தமான நீரில் மூழ்கிவிட்டுப் பிராணாயாமம், சூரிய நமஸ்காரம் முதலியவைகளைப்பண்ணலாம். சுகவாழ்க்கைக்கு மேலானவழி பிராணாயாமமே.

இங்ஙனம் உழைப்பவர் நல்ல காற்றை வேண்டிய அளவு உட்கொள்பவர் ஆவர். காற்றுத்தான் உதிரத்தைச்சுத்தஞ்செய்வது. உதிரம் சுத்தமாகவே இருக்குமானால் நோய் என்பதே அணுகமாட்டாது. நோயற்ற வாழ்க்கையே சுகவாழ்க்கை. நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்.

சுக வாழ்க்கையை வேண்டி உழைப்பவர் பின்னும் செய்ய வேண்டியதும் உண்டு. அதுதான் உணவு விஷயத்தில் பெரிதும் கவனமாயிருத்தல். 'சுவை மிகுந்ததாயிருக்கின்றது' என்றோ, 'இலகுவில் கிடைக்கின்றது' என்றோ தலையணைக்குப் பஞ்சைத் திணிப்பதுபோல்எப்பொழுதும்உண்ணும் வேலையாகவேஇருத்தல்

கூடாது. அஃது அஜீரணத்தை உண்டுபண்ணி நோயினைப் பெருக்கும். அன்றியும், அது காலன்கையில் தன்னைக்காட்டிக்கொடுப்பதும் ஆகும். 'மீதூண் விரும்பேல்' என்பது ஔவையார் வாக்கு. சிறிது அஜீரணம் ஆனாலும் 'லங்கணம் பரம ஔஷதம்' என்றபடி பட்டினி கிடத்தலே நல்ல மருந்தாம். நமது பெரியோரும் பல பட்டினி விரதங்களை உண்டு பண்ணியிருக்கின்றனர். "நாம் உலகமே கிடைப்பதானாலும் பசித்தாலன்றி உண்ணமாட்டோம். இந்நிலையில் நமனார்க்கு எம்மிடத்தில்வேலை யாது இருக்கின்றது?" என்பர் தேரையர். ஒரு போது உண்பவர் 'யோகி' எனப்படுவார்; இருபோது உண்பவர் 'போகி' எனப்படுவர். மூன்றுபோது உண்பவர் 'ரோகி' எனப்படுவார். நான்குபோது உண்பவர் 'உடல் விட்டுபோகி' எனப்படுவார். ஆகவே, சுகவாழ்க்கையை விரும்புவோர் "எந்நாளும் பசித்தபொழுது உண்பது, வேண்டியஅளவே உண்பது, கால இயல்பு, தேக இயல்புகளோடு மாறு கொள்ளாத உணவுகளை உண்பது; சுவை, வீரியங்களால் கெடாத சுத்தமான உணவுகளை உண்பது" என்ற இவற்றில் சிறிதும் தவறுதல் கூடாது. இயன்ற அளவு நாவை அடக்கியே பழகல் வேண்டும்.

இக்கூறியாங்கு உழைத்து, உண்டு வாழ்பவர் தமது சுகத்தைப் பெருக்கிக் கொள்ள நன்றாய் உறங்கவும் வேண்டும். உறக்கமே கஷ்டப்பட்டு உழைத்த உறுப்புக்களை மீட்டும் வன்மையுறச் செய்வது. பகலில் ஓடி ஆடி உழைத்து வருந்திய உறுப்புக்கள் இரவில் உறக்கத்தில் அமைதி உற்றுக் கிடக்கின்றன தாங்கள் இழந்த பலத்தைத் திரும்பப் பெருகின்றன. நன்றாய்த் தூங்காவிட்டால் உறுப்புக்கள் மறுபடியும் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யமாட்டா. நன்றாய்த் தூங்க விரும்பியவர் மனத்தே சிறிதும் கவலையை வைத்துக்கொள்ளலாகாது. "கவலை கொண்டார்க்குக் கண்ணுறக்கம் வாராது" என்பது பழமொழி. படுக்கையிலே கிடந்து புரண்டு கொண்டும், கனாக்கண்டுகொண்டும் இருப்பது நல்ல உறக்கமாகாது. பகலில் உழைத்து இரவில் உறங்காதவர் மறுநாள் சோம்பேறியாக இருப்பர். சோம்புத்தனம் மூதேவிக்கு இருப்பிடம். இதனை விரும்புவது அறிவுடையோர்க்கு அழகாகுமா? ஆகாதல்லவா? ஆதலின், ஒவ்வொருவரும் "ஒன்றையும் அறியாமல் நன்றாய்த் தூங்கினேன்" என்று விழித்

தெழுந்தபின் சொல்லுமாறு அவ்வளவு நன்றாகத்தூங்கவேண்டும், எக்காரணங்கொண்டும் பகலிலே தூங்குதல் கூடாது. “ நாம் பகலிலே உறங்கமாட்டோம். நம்மிடத்திலே நமனார்க்கு என்ன வேலை இருக்கின்றது ? ” என்றார் தேரையர்.

ஆகவே, சுகவாழ்க்கையை விரும்புவோர் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்தல் வேண்டும். நன்றாய் ஜீரணமானபிறகு வேண்டிய அளவே உண்ணல் வேண்டும். உழைத்த உறுப்புக்கள் களைப்பு நீங்கி வன்மையைப் பெறுமாறு உறங்கல் வேண்டும். இவையே சுகவாழ்க்கைக்கு உற்றன. இவை கைவரின் சுகவாழ்க்கைக் குறிய எஞ்சிய அனைத்தும் கைவரும். வாழ்க்கையும் இனிதாம்.

தண்டமிழ்த்தொண்டன்.

---

## ஸுநீதிமாலிகா.

॥ सुनीतिकुसुममाला ॥ 𑌸𑍁𑌨𑍀𑌤𑌿𑌕𑍁𑌸𑍁𑌮𑌮𑌾𑌲𑌾 ॥

येसीग्वर्णलिति प्रसिद्धसुमति श्रीहूणदेश्यप्रभो-
रुत्साहस्य वशंवदेन रचिता धर्मार्थकामार्थिनाम्।
बालानां सुखबोधनाय सरळश्लोकोत्पलैर्गुम्फिता
कण्ठालंकृतिरस्तु सर्वसुदृशां सा नीतिमालाऽधुना ॥ १ ॥

𑌯𑍇𑌸𑍀𑌗𑍍𑌵𑌰𑍍𑌣𑌲𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍁𑌮𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌹𑍂𑌣𑌦𑍇𑌶𑍍𑌯
𑌪𑍍𑌰𑌭𑍋𑌰𑍁𑌤𑍍𑌸𑌾𑌹𑌸𑍍𑌯 𑌵𑌶𑌂𑌵𑌦𑍇𑌨 𑌰𑌚𑌿𑌤𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌿
𑌨𑌾𑌮𑍍 । 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌸𑍁𑌖𑌬𑍋𑌧𑌨𑌾𑌯 𑌸𑌰𑌳𑌶𑍍𑌲𑍋𑌕𑍋
𑌤𑍍𑌪𑌲𑍈𑌰𑍍𑌗𑍁𑌮𑍍𑌫𑌿𑌤𑌾 𑌕𑌣𑍍𑌠𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌦𑍃𑌶𑌾𑌂
𑌸𑌾 𑌨𑍀𑌤𑌿𑌮𑌾𑌲𑌾𑌽𑌧𑍁𑌨𑌾 ॥ ॥ ௧ ॥

யேஸீக்பர்ணல் (Asicburnal) என்று பிரஸித்தரும் நற்புத்தியுள்ளவருமான ஆங்கிலேய பிரபுவின் உத்ஸாஹத்திற்குக் கட்டுப்பட்ட வெங்கடசுப்பிரமணியதீக்ஷிதரால், அறம், பொருள், இன்பம் இவைகளை விரும்பிக் கற்றுணரும் வாலிபர்களுக்கு எளிதாய்

போதிப்பதற்காக, இப்போது எளிய நடையுள்ள செய்யுட்களாகிற உத்பலங்களால் தொடுக்கப்பட்ட சிறப்புற்ற நீதிமாலையானது எல்லா நல்லறிவுள்ளவர்களின் கண்டாபரணமாக இருக்கட்டும்.

अप्पय्यदीक्षितशिखामणिवंशसारमुक्ताफलेन कविमार्गविचक्षणेन ।
अप्पाभिधानशिशुना रचितेयमार्यैरङ्गीकृता भवतु धर्मसरोजमाला ॥२॥

அப்பய்யதீக்ஷிதஶிகாமணிவம்ஶஸாரமுக்தாபலேந கவிமார்கவிசக்ஷணேந । அப்பாபிதாநஶிஶுநா ரசிதேயமார்யைரங்கீக்ருதா பவது தர்மஸரோஜமாலா ॥ ௨ ॥

அப்பய்யதீக்ஷிதச்ரேஷ்டரின் வம்சமாகிற மூங்கிலில் உதித்த முத்தாயும், கவிகளின் வழியில் நிபுணராயுமுள்ள அப்பா என்று வழங்கப்படுகிறவருமான சிறுவனால் இயற்றப்பட்ட இந்த தர்மங்களாகிற புஷ்பங்களின் மாலையானது ஆரியர்களால் அங்கிகரிக்கப்பட்டதாக ஆகட்டும்.

बर्णेलनामकहूणराजविभुना प्रोत्साहितोऽहं पुरा
प्रोक्तं द्राविडभाषया सुकविना श्रीवल्लभाख्याजुषा ।
धर्मस्कन्धमुदाहरामि सरलैः श्लोकैस्समं टीकया
सन्तुष्यन्तु विपश्चितो गुणकणग्राहेऽपि सान्द्रादराः ॥ ३ ॥

பர்ணேலநாமகஹூணராஜவிபுநா ப்ரோத்ஸாஹிதோऽஹம் புரா ப்ரோக்தம் த்ராவிடபாஷயா ஸுகவிநா ஶ்ரீவல்லபாக்யாஜுஷா । தர்மஸ்கந்தமுதாஹராமி ஸரளை: ஶ்லோகைஸ்ஸமம் டீகயா ஸந்துஷ்யந்து விபஶ்சிதோ குணகணக்ராஹேऽபி ஸாந்த்ராதரா: ॥ ௩ ॥

பர்ணல் என்ற ஆங்கிலேய பிரபுவால் உத்ஸாஹப்படுத்தப்பட்ட யான் திருவள்ளுவர் என்ற நற்கவியால் முன் தமிழ்பாஷையில் இயற்றப்பட்ட குறளின தர்மஸ்கந்தத்தை (धर्मस्कन्ध தர்மஸ்கந்த) உரையுடன்கூடின எளிய செய்யுற்களால் ஸம்ஸ்கிருதமாய் மொழிபெயர்க்கிறேன். குணங்களின் சிறு பான்மையைக் கிரகிப்பதிலும் மிகுந்த ஆதரவுள்ள வித்வான்கள் சந்தோஷிக்கட்டும்.

अप्पय्याध्वरिवंशमौक्तिकमणिः प्रख्यायते योऽष्टमः
यो विश्वेश्वरवाजपेयमखिनो बालाम्बिकागर्भजः ।
सुब्रह्मण्यपदं च वेंकटमुखं यन्नामधेयं विदुः
तस्येयं कृतिरेधतां क्षितितलेष्वाचन्द्रसूर्यस्थिता ॥ ४ ॥

𑌅𑌪𑍍𑌪𑌯𑍍𑌯𑌾𑌧𑍍𑌵𑌰𑌿𑌵𑌂𑌶𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌮𑌣𑌿𑌃 𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌯𑌤𑍇 𑌯𑍋𑌽𑌷𑍍𑌟𑌮𑌃
𑌯𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌵𑌾𑌜𑌪𑍇𑌯𑌮𑌖𑌿𑌨𑍋 𑌬𑌾𑌲𑌾𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌗𑌰𑍍𑌭𑌜𑌃 ।
𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌪𑌦𑌂 𑌚 𑌵𑍇𑌂𑌕𑌟𑌮𑍁𑌖𑌂 𑌯𑌨𑍍𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃
𑌤𑌸𑍍𑌯𑍇𑌯𑌂 𑌕𑍃𑌤𑌿𑌰𑍇𑌧𑌤𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌤𑌲𑍇𑌷𑍍𑌵𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।

அப்பய்யதீக்ஷிதர் தொடங்கி எட்டாவதாயும் உள்ள யாதொருவர் விசுவேசுரவாஜபேயருக்கு வாலாம்பிகையின் கர்ப்பத்தில் உண்டானவரோ, எவரின் பெயரை வெங்கடசுப்பிரமணியர் என்று பெரியோர் அறிவார்களோ, அவருடைய இந்நூலானது சந்திரஸூரியர்கள் உள்ளவரையில் இருந்துகொண்டு, பூபிரதேசங்களில் விருத்தியாகட்டும்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரீ.

---

ஸ்ரீ:

# ஓர் விஜ்ஞாபனம்.

(1) ஒரு மாஸத்தில் இரண்டுதிதிகள் வந்தால் அதில் இரண்டிலும் மாஸிகம் செய்யவேண்டுமா? அல்லது ஒரு திதியில் மட்டும் தான் செய்யவேண்டுமா?

(2) இதில் ஏதாவது சம்பிரதாயபேதங்கள் உண்டா?

இதுவிஷயத்தை வித்வான்கள் ஆதாரத்துடன் நம் ஆர்ய தர்மம்மூலம் பிரசுரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ ஸுதர்சனசர்மா,
ஜோஸ்யம், பள்ளத்தூர்.

---

हरः । गः इत्ययमंशोऽविकृत एव । अतस्स्वांशोने लवोनहरोहरः । अंशस्त्वविकृत इत्युक्तमुपपन्नम् ।

अत्रोद्देशकः—

यस्त्रिघ्न,स्त्रिभिरन्वितः स्वचरणै,र्भक्तस्ततस्सप्तभि,

स्स्वत्र्यंशेन विवर्जितः, स्वगुणितो, हीनो द्विपञ्चाशता ।

तन्मूले, ऽष्टयुते, हृते च दशभि, र्जातं द्वयं, ब्रूहि तं

राशिं, वेत्सि हि चञ्चलाक्षि! विमलां बाले!! विलोमक्रियाम् ॥

न्यासः—गुणः, 3, क्षेपः, $\frac{3}{4}$, भाजकः, 7, ऋणं, $\frac{1}{3}$, वर्गः, ऋणं, 52, मूलं, क्षेपः, 8, हरः, 10, दृश्यं, 2, यथोक्तकरणेन जातो राशिः, 28,

अत्रोदाहरणमाह— यस्त्रिघ्न इति—यः=राशिः, त्रिघ्नः=त्रिभिर्गुणितः, तत इति सर्वत्र योज्यम् । ततः=त्रिभिर्गुणनानन्तरं, त्रिभिः=त्रिगुणितैः, स्वचरणैः=स्वचतुर्थांशैः, अन्वितः=युतः, ततः, सप्तभिर्भक्तः, ततः, स्वत्र्यंशेन=स्वीयतृतीयांशेन, विवर्जितः=हीनः, ततः, स्वगुणितः=वर्गीकृतः, ततः, द्विपञ्चाशता हीनः, तन्मूले=एवं कृते जातस्य तस्य वर्गमूले, अष्टयुते=अष्टभिर्युक्ते, दशभिः, हृते=विभक्ते च सति, द्वयं=द्वितयं, जातं=फलतया निष्पन्नं, तं=पूर्वपरिकल्पितं, राशिं, ब्रूहि । हे चञ्चलाक्षि! बाले!! विमलां=उक्तस्य व्यत्ययकरणात्मकतया बुद्धिक्लेशजननादिदोषरहितां, विलोमक्रियां=विलोमविधिं, वेत्सि हि=जानासि किल, अत्रान्ते लब्धं द्वयं दृश्यम् । तदवलम्ब्यान्त्याद्वैलोम्येन उद्देशकाभीष्टराशिस्साध्यः । यथा— दशभिर्हृते इदं लब्धमिति दशभिर्गुणिते पूर्वराशिर्लभ्यते विंशतिरिति । अष्टभिर्युते इयं जातेति अष्टभिर्हीने जाता द्वादशसंख्या । इयं मूलीकृत्य जातेति वर्गीकृता जाता, 144, एतत् द्विपञ्चाशता हीनं जातमिति तद्युतं जातं, 196, एतद्वर्गीकरणाल्लब्धमिति मूलीकृते जातं, 14, एतत्स्वत्र्यंशोनमिति "अथ स्वांशाधिकोनेत्वि"ति स्वद्व्यंशयोजने कृते जातं, 21, एतत्सप्तभिर्भजनाल्लब्धमिति सप्तभिर्गुणिते

जातं, 147, एतत्त्रिभिस्स्वचरणैरन्वितं जातमिति, विशेषविधिना स्व-सप्तांशत्रयेण हीनं जातं, 84, एतत्त्रिभिर्गुणिते लब्धमिति त्रिभिर्हृतं जातं, 28, एतदेव उद्देशकाभीष्टराशिः । एतन्नवीनरीत्या न्यासं कृत्वा प्रदर्श्यते । तत्रापि स्वांशाधिकोनविषये भागानुबन्धभागापवाहपर्यवसित-रीत्या लिख्यते—यथा—प्रथमत उद्देशकाभीष्टराशिः, य, इति कल्प्यते । तत्रोद्देशकालापवत् गुणनभजनादिके कृते न्यासः ।

$\sqrt{\left\{(\text{य}\times 3\times \frac{7}{4}\div 7\times \frac{2}{3})^2-52\right\}}+8\div 10=2$,एतदुद्धारस्त्वित्थम्

$\sqrt{\left\{(2\times 10\text{-}8)^2+52\right\}}\div \frac{2}{3}\times 7\div \frac{7}{4}\div 3=\text{य}$, अस्याप्युद्धारः–यथा ।
$2\times 10=20, 20\text{-}8=12, 12^2=144, 144+52=196, \sqrt{196}=14$, $14\div \frac{2}{3}=14\times \frac{3}{2}+21$, $21\times 7=147$, $147\div \frac{7}{4}=147\times \frac{4}{7}=84$, $84\div 3=28$, इयमेव प्रथमोद्दिष्टयावत्तावन्मितिः । एतादृशन्यासलेखने "अथ स्वांशाधिकानेतिवति" विशेषविधिर्नापेक्ष्यत इति लाघवं विद्यत इति ज्ञेयम् । एवं च भागानुबन्धभागापवाहपर्यवसितरीत्याश्रयणेन वि-शेषविधिरप्याश्रितोभवतीति दिक् ॥ ॥ ४७ ॥

उद्देशकालापस्य प्रातिलोम्येनोद्दिष्टराशिज्ञानोपायभूतं विलोमविधि-मुक्त्वा उद्देशकालापस्यानुलोम्येन तदुद्दिष्टराशिज्ञानायेष्टकर्मावतारयति-अथेष्टकर्मस्वित्यादि—

**अथेष्टकर्मसु दृश्यजाति शेषजाति विश्लेषजात्यादौ करणसूत्रं वृत्तम् ।**

**उद्देशकालापवदिष्टराशिः क्षुण्णो हृतोंशै रहितो युतो वा ।**
**इष्टाऽऽहतं दृष्टमनेन भक्तं राशिर्भवेत्प्रोक्तमितीष्टकर्म ॥४८॥**

उद्देशकेति—उद्देशकालापवत्- उद्देशकस्य=उदाहर्तुः, आलापः= उक्तिः, तद्वत्, गुणनहरणादिकं तेन यथा निर्दिष्टं तदानुलोम्येनेतियावत् । इष्टराशिः=यः कश्चित्स्वाभीष्टराशिः, क्षुण्णः=गुणितः, हृतः=भक्तः, अंशैः=स्वांशैः मूलराश्यंशैर्वा, रहितः=ऊनितो वा, युतो वा=युक्तो वा, कार्य इति शेषः । क्षुण्णः, हृतः, इति गुणनभजनमात्रनिरूपणेन वर्गादे-

रनुक्त्या–यत्र वर्गमूलादिकर्मोदाह्रियते तत्रायं विधिर्नकार्यः। "अंशैराहितो युतो"वेति च स्वांशयोजनवियोजनमात्रसूत्रणादन्यराशेर्योगवियोगौ यत्र कीर्त्येते—तत्राप्ययं विधिर्न कार्य इति व्यज्यते। नचेदं वर्गादिरुपलक्षणमिति वाच्यम्। इष्टराशावुद्देशकालापवत्करणे वर्गकरणसम्भवेऽपि नियमेन सर्वत्र मूलक्रियाया असम्भाव्यत्वात्। गुणनभजनादिकं कृत्वाऽनन्तरं किं कर्तव्यमित्यत आह—इष्टाऽऽहतमिति–दृष्टं=अन्ते उद्दिष्टं, इष्टाऽऽहत =स्वपरिकल्पितेष्टगुणितं सत्, अनेन=गुणनभजनादिक्रियावसाने परिनिष्पन्नेन, भक्तं सत्, राशिः=उद्देशकाभीष्टराशिः, भवेत्, इति=एवं, इष्टकर्म=तदाख्यं, प्रोक्तं=प्रकथितम्। अत्रोपपत्तिः—उद्देशकालापवदिष्टराशौ, गुणनादिकर्मणि कृते सति यत्फलं लभ्यते, तेनानुपातः कर्तव्यः—यद्यनेनेष्टतुल्यो मूलराशिर्लभ्यते, तदा प्रष्टुरुद्दिष्टेन क इति। त्रैराशिकविधानेन दृष्टे इष्टगुणितेऽनेन भक्ते मूलराशिर्भवतीति स्फुटैव। अतोऽस्मिन्वर्गादावुदाहृते त्रैराशिकासम्भवात् वर्गाद्युदाहरणस्थलेऽयं विधिर्न कार्य इति सुष्ठूक्तम्॥ ॥ ४८ ॥

सूत्रव्याप्तिदर्शनार्थमत्रोदाहरणानि। तत्र प्रथमं गुणनभजनस्वांशयोजनवियोजनवदुदाहरणमाह—अत्रेति॥

अत्रोद्देशकः—

पञ्चघ्नः स्वत्रिभागोनो दशभक्तः समन्वितः।
राशित्र्यंशार्धपादैस्स्यात्को राशिर्नूनसप्ततिः॥ ४९॥

न्यासः, गुणः, 5, ऊनः, $\frac{1}{3}$, भागः, 10, राशित्र्यंशार्धपादैः, $\frac{1}{3}+\frac{1}{2}+\frac{1}{4}$, समन्वितः, दृष्टः, 68,

अत्र किलेष्टराशिः, 3, पञ्चघ्नः, 15, स्वत्रिभागोनः, 10, दशभक्तः, 1, अत्र कल्पितराशेः, 3, त्र्यंशार्धपादाः, $\frac{3}{3}+\frac{3}{2}+\frac{3}{4}$, एतैस्समन्वितो जातः, $\frac{17}{4}$, अनेन दृष्ट, 68, मिष्टाऽऽहतं भक्तं जातो राशिः, 48, एवं यत्रोदाहरणे राशिः केनचिद्गुणितो, भक्तो वा, राश्यंशेन रहितो, युतो वा दृष्टः, तत्रेष्टं राशिं प्रकल्प्य तस्मिन्नुद्देशकालापवत्कर्मणि कृते यन्निष्पद्यते—तेन भजेद्दृष्टमिष्टगुणं, फलं राशिः स्यात्।

पञ्चघ्न इति—यो राशिः, पञ्चघ्नः=पञ्चभिर्गुणितः, स्वात्रिभागोनः—स्वस्य=पञ्चभिर्गुणिते जातस्य, यस्त्रिभागः=त्र्यंशः, तेन ऊनः=रहितः, दशभिर्भक्तः, राशित्र्यंशार्धपादैः—राशेः=प्रथमत उद्देशकोद्दिष्टराशेः, ये, त्र्यंशार्धपादाः=त्रिभागार्द्धभागचतुर्भागाः, तैः, समन्वितः=सहितः। द्व्यूनसप्ततिः=अष्टषष्टिः जाता, स राशिः कः? न्यासे क्रियाक्रमो दर्शित एव। स एवं तत्तच्चिह्नलेखनपूर्वकं विविच्यते। न्यासोक्तरीत्या त्रयमिष्टं कल्प्यते। तथासति, $3 \times 5 \times \frac{2}{3} \div 10 + \frac{3}{3} + \frac{3}{2} + \frac{3}{4}$ इष्टराशौ उद्देशकालापवत् कर्म कृतं भवति। एतदुद्धारे निष्पन्नं, $\frac{17}{4}$, अनेन, इष्टेन त्रिकेण गुणिते दृष्टे, 68, अस्मिन् विभक्ते, $68 \times 3 \div \frac{17}{4} = \frac{204 \times 4}{17} =$ 48, चतुष्केणेष्टेन यथा, $4 \times 5 \times \frac{2}{3} \div 10 + \frac{4}{3} + \frac{4}{2} + \frac{4}{4}$, अत्र परिनिष्पन्नं $\frac{17}{3}$, अनेनेष्टगुणिते दृष्टे भक्ते, $68 \times 4 \div \frac{17}{3} = \frac{272 \times 3}{17} =$ 48तदेवजातम् एवमेव पञ्चकादिकेपीष्टे ज्ञेयम्। सर्वत्र पूर्ववदेव फलम् ॥ ४९ ॥

दृश्यजात्युदाहरणम्—

अमलकमलराशेस्त्र्यंश, पञ्चांश, षष्ठैस्त्रिनयनहरिसूर्या येन तुर्येण चाऽऽर्या। गुरुपदमथ षड्भिः पूजितं शेषपद्मैः सकलकमलसंख्यां क्षिप्रमाख्याहि तस्य ॥ ॥ ५० ॥

न्यासः, $\frac{1}{3}, \frac{1}{5}, \frac{1}{6}, \frac{1}{4}$, दृश्यं, 6, अत्रेष्टमेकं राशिं प्रकल्प्य प्राग्वज्जातो राशिः, 120,

प्रथमोद्दिष्टराश्यंशाः केवलं यत्र विशोध्यन्ते, तादृगुदाहरति—अमलेति—एतादृशोदाहरणस्य दृश्यजातिरिति पूर्वेषां संज्ञा। येन=स भक्तिप्रकर्षं हरिहरादीन् पूजयता, स्तेनैवाऽऽहृतस्य, अमलकमलराशेः=शुद्धपद्मवृन्दस्य, त्र्यंश, पञ्चांश, षष्ठैः=एभिर्मूलराश्यंशैः, क्रमेण, त्रिनयनहरिसूर्याः+त्र्यम्बकनारायणाऽऽदित्याः, पूजिता इति लिङ्गवचनविपरिणामेन योज्यम्। तुर्येण च=राशिचतुर्थांशेन च, आर्या=अम्बिका, पूजिता, अथ=एतत्पूजानन्तरं, षड्भिः शेषपद्मैः, गुरुपदं=श्रीगुरु-